மாணவர்களின் தெளிவு – துணிவு ஒரு தலைமுறைக்கு ஊக்கமளிக்கட்டும்;
அமைச்சரின் பதவி விலகல் முற்றல்ல – நீட்டை ஒழித்தே தீருவோம்!

# உரிமைப் போராட்டத்தில் வென்ற இளைஞர்களுக்குப் பாராட்டுகள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 27-

மாணவர்களின் தெளிவையும், துணிவையும், உணர்வையும் அதிகாரத்தில் இருப்போர் குறைத்து மதிப்பிடுகிறார்கள். அநீதியை ஏற்காமல் நடைபெறும் இந்த எழுச்சி ஒரு தலைமுறைக்கு ஊக்கமளிக் கட்டும் எனவும், அதே வேளையில் ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலகல் முற்றல்ல, மூன்று வேளாண் சட்டத்தை திரும்பப் பெற வைத்ததுபோல் நீட்டையும் ஒழித்தே தீருவோம். தங்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் வென்ற இளைஞர்கள், மாணவர்களுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

**இந்தியாவின் உழவர்கள் முதலில் சாதித்துக் காட்டினார்கள்.**

**இப்போது இளைஞர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.**

**நாடு முழுதும் களத்திலும் இணையத்திலும் தங்களது உரிமைகளுக்காகப் போராடி இந்த வெற்றியைப் பெற்றுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்!**

**அதே வேளையில், தர்மேந்திர பிரதானின் பதவி விலகல் முற்றல்ல; மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வைத்தது போல நீட்டையும் ஒழிப்போம்!**

**பொய்யான பரப்புரைகளாலும், வெற்று வாக்குறுதிகளாலும் இளைஞர்களைத் திசைதிருப்பலாம் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால், தங்களின் எதிர்காலத்தைத் தாங்களே வடிவமைக்கத் தீர்மானித்திருக்கும் தலைமுறையின் தெளிவையும், துணிவையும், உணர்வையும் அவர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள்.**

**கேள்வி கேட்கவும், அரசியலில் பங்கேற்கவும், அநீதியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாமல் மறுக்கவும் இந்த எழுச்சி ஒரு தலைமுறைக்கு ஊக்கமளிக்கட்டும். விழிப்புணர்வும் அஞ்சாமையும் கொண்ட இளைஞர்களே எந்த ஜனநாயகத்திற்கும் வலிமையான அடித்தளம்.”**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.

## ‘நீட்’டுக்கு எதிரான வேட்டு!



**நீட்டி முழக்காதீர்...**
**வாட்டி வதைக்காதீர்...**

**வாட வைக்கும் நீட்டு**
**மாணவர்க்கு வேட்டு...**

**காவு வாங்கும் தேர்வு**
**கசிந்து வந்தும்**
**கொல்கிறது.....**

**மாணவ எழுச்சி**
**பரவுகிறது கிளர்ச்சி....**

**மத்தியில் போராட்டம்**
**புத்தியில் ஏறட்டும்...**
**அடக்குமுறை**
**முறையல்ல....**
**அது அழிவின் ஆரம்பம்!**

**சம்பிரதாயம் என்று**
**கருதாமல் பிரதானம்**
**என்று முடிவெடுங்கள்....**

**வீதியில் போராட்டம்**
**நடக்கும் போது**
**இங்கு திரையரங்கில்**
**கொண்டாட்டம்..... குத்தாட்டம்....**

**ஏதும் சாதிக்க**
**இயலாதோர்**
**இப்போதும்**
**மௌனம் சாதிக்கிறார்கள்...**

**இவர்கள் காட்டிய**
**வாய் ஜாலம் எல்லாம்**
**மாய்மாலம் என்று**
**மக்கள் உணர்கின்றனர்....**

**லத்திசார்ஜ் செய்யும்**
**அரசுக்கு**
**புத்திசார்ஜ் தேவை!**

**நீட்டே வேண்டாம்**
**என்று தளபதி**
**முன்னெடுக்க....**
**நீட்டுக்கு எதிராக**
**முழங்கி**
**கையெழுத்து இயக்கம்**
**வழங்கிய**
**இளந்தலைவர் உதயநிதி..**
**தீர்வு ஏற்படும் வரை**
**நிற்காமல் ஓடும் நதி....**

**மாணவர் எழுச்சி**
**ஆள்வோருக்கு**
**மிரட்சி!**

**வெல்லும் இந்தப்**
**போராட்டம்**
**சொல்லும்**
**தேசிய நீரோட்டம் !**



**சேப்பாக்கம் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா**
சென்னை மேற்கு மாவட்ட
சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு
அமைப்பாளர்

சராசரி தனிநபர் வாங்கும் திறனில்

# கடும் ஏற்றத் தாழ்வு; சரிசெய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசுக்கு கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை.27-*

*நுகர்வோர் நிலையில் விலைவாசிகள் குறித்து அரசு அண்மையில் ஆய்வுகள் ஏதேனும் மேற்கொண்டதா? எனில், அதன் விவரங்களும் அவற்றின் வாயிலாகக் கண்டறிந்த நிலவரம் என்ன?*

*சென்ற மூன்று ஆண்டுகளில், பல்வேறு மாநிலங்களில், தனிநபர் நுகர் பொருள்களுக்கான மாதச் செலவு குறித்த விரிவான தகவல்கள் என்ன?*

*தனிநபர் நுகர்வு (consumption) அளவு மற்றும் வாங்குதிறனில் (purchasing power) இந்திய மாநிலங்கள் இடையில் பெரிய அளவில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதாக இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்றால் அதன் விவரங்கள் என்ன?*

*மாநிலங்கள் இடையே நிலவும் பெரிய அளவிலான தனிநபர் வாங்கும் / நுகர்திறன் ஏற்றத்தாழ்வை நீக்க ஒன்றிய அரசு கொள்கை இடையீடு உள்ளிட்ட எடுத்த பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் என்னென்ன?*

*அமைச்சரின் விளக்கம் வருமாறு :-*

*நாட்டில் நிலவும் கடுமையான விலைவாசி உயர்வு காரணமாக பல்வேறு மாநிலங்களிலும் மக்களின் பொருட்கள் வாங்கும் திறன், செலவு செய்யும் சக்தி, நுகர் ஆற்றல் (consumption capacity) ஆகியவை பாதிக்கடப் பட்டுள்ளதைக் கருத்தில் இருத்தி இந்த கேள்வியை டி.ஆர். பாலு, எம்.பி. எழுப்பி இருந்தார். இதற்கு ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கல் துறைக்கான அமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜீத் சிங் அவர்கள் மக்களவையின் 22.7.2026 நடைபெற்ற அமர்வில் விரிவான பதில் அளித்திருந்தார்.*

*எழுத்து பூர்வமாக அமைச்சர் அளித்த பதிலில் தெரிவித்த விவரங்கள் வருமாறு :-*

*புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கல் அமைச்சகம் சமீப காலத்தில் நுகர்வோர் அளவிலான விலைவாசிகள் குறித்த குறிப்பிடத்தக்கஆய்வுகள் எதையும் மேற்கொள்ள வில்லை. ஆனால், நுகர்வோர் விலைவாசிகள் குறீயீடு (கன்ஸ்யூமர் பிரைஸ் இண்டெக்ஸ் CPI) தொகுத்தல் சம்பந்தப்பட்ட செயல்முறைக் கட்டமைப்பை, 2012 முதல் 2014 வரையிலான கால கட்டத்தில் அடித்தளங்களின் முழுமையான வலுவூட்டல் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2023-24 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மாதாந்திர குடும்ப செலவுகள் பற்றிய ஆய்வுகளில் கிடைத்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த முயற்சி செய்து முடிக்கப்பட்டது. கன்ஸ்யூமர் பிரைஸ் இண்டெக்ஸ் என்பது குடும்பங்கள் பயன்படுத்தும் பொருள்களின் விலைவாசியின் அளவையும் குறிப்பதாகும்.*



*2022-23 மற்றும் 2023-34 ஆகிய இரண்டு ஆண்டுகளில், ஆகஸ்ட் முதல் ஜூலை வரையிலான கால கட்டத்தில், குடும்பங்களின் நுகர்வுக்கான செலவு பற்றிய தகவல் சேகரிக்க பட்டன. இதற்கு முன், 2011-12 ஆம் ஆண்டில் தான் இத்தகைய ஆய்வு செய்ய ப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.*

*இந்த ஆய்வுகளின் படி, 2023-24 ல், அனைத்திந்திய அளவில் சராசரி தனிநபர் ( per capita) மாதாந்திர செலவு கிராம பகுதியில் ரூ 4122 , நகர்ப்புற பகுதியில் ரூ 6996 என்ற அளவில் இருந்தது. இது, முந்தைய ஆண்டை விட , கிராமப்புறத்தில் ரூ 340 ,நகர்ப்புறத்தில் ரூ 537 என்ற அளவுக்கு கூடியுள்ளது.*

*ஆனால் சிக்கிமில் ரூ.13927/-, சண்டிகரில் ரூ. 13425/- ,அந்தமான் நிகோபாரில் ரூ 10, 459 என தேசிய சராசரியை விட மிகமிக அதிகமாக உள்ளது. மாறாக, பல மாநிலங்களில் சராசரி மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவு என்பது, சத்திஸ்கர் மாநிலத்தில் ரூ4927/-, உத்தரப் பிரதேசத்தில் ரூ5395/-, ஜார்கண்டில் ரூ 5393/- என மிகவும் குறைந்த அளவில் உள்ளது.*

**தமிழ் நாட்டின் நிலைமை; தேசிய சராசரியை விட அதிகம்!**

*தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், சராசரி தனிநபர் மாதாந்திர செலவு, 2022-23 ல் கிராமப் பகுதியில் ரூ 5310 /- ,நகர்ப் புறத்தில ரூ.7630 /- ஆகவும், 2023-24 ல் அதிகரித்து, கிராம பகுதிகளில் ரூ 5701/- நகர்ப்புற பகுதியில் ரூ8165/- என்ற அளவிலும் மேம்பட்டுள்ளது. தேசிய சராசரியுன் ஒப்பிட்டால் தமிழ்நாட்டு மக்களின் தனிநபர் சராசரி மாதாந்திர செலவு என்பது, கிராமப் புற மக்களைப் பொறுதவரையில் ரூ.1509/- கூடுதலாக வும், நகர்ப்புற மக்களைப் பொறுவரை ரூ.1169/- கூடுதலாகவும் உள்ளது.*

**உ.பி., பீகார் உள்ளிட்ட 12 மாநிலங்கள் பின்தங்கிய நிலை!**

*2023-24 கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களின் படி தேசிய சராசரியை விட, 12 மாநிலங்கள் குறைவான தனிநபர் மாதாந்திர நுகர்வு செலவுத் திறனுடன் இருப்பது தெரியவந்துள்ளது . இதில், அசாம்,பீகார்,சத்தீஸ்கர், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், மணிப்பூர், ஒரிசா, ராஜஸ்தான், மேற்கு வங்கம், தாத்ரா நாகர் ஹவேலி, ஜம்மு காஷ்மீர், லட்சத்தீவுகள் அடங்கும்.*

**ஒன்றிய அரசின் முன்னெடுப்புகள்!**

*இந்த நிலையில் முன்னேற்றம் கொண்டுவர ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொள்கை சார்ந்த இடையீடுகளும் இதில் அடங்கும். குடும்பங்களின் வாங்கும் திறன் மற்றும் நுகர்வு சக்தியை அதிகரித்தல், மாநிலங்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல் போன்றவை இதில் உள்ளடங்கும். குறிப்பாக உட்கட்டமைப்பு திட்டங்களில் தொடர்ச்சியாக முதலீடு செய்வது, வேலை வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுக்கு நீடித்த ஆதரவு பி.எம்.முத்ரா போன்ற நிதி உதவித் திட்டங்கள் மூலமாக எளிதில் கடன் வழங்குதல் போன்ற முன்னெடுப்பு களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் ராவ் இந்தர்ஜீத் சிங் தனது விரிவான பதிலில் உரிய தரவுகளுடன் தெரிவித்தார்.*

# திருவள்ளூர் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் க.பார்த்தசாரதி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 27-

பொன்னரி தொகுதியில் 1991-ஆம் ஆண்டில், கழகத்தின் சார்பில் சட்டமன்ற கழக வேட்பாளராக போட்டியிட்டவரும், சோழவரம் ஒன்றிய முன்னாள் செயலாளரும், திருவள்ளூர் தெற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளருமான க.பார்த்தசாரதி (வயது79) 25.07.2026 சனிக் கிழமை அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித் துள்ளார்.

தி.மு.க அரசின் சட்டமன்ற விவாதங்கள், நிர்வாக அனுபவங்களையும்

# மக்கள் நலத் திட்டங்களையும் ஆழமாகப் படித்து, உணர்ந்து ஆட்சி நடத்துக!

## மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் அறிக்கை!

தஞ்சை, ஜூலை. 27–

அரசும், அரசு அதிகாரிகளும் கடந்த கால தி.மு.க அரசின் ஆவணங்கள், சட்டமன்ற விவாதங்கள், நிர்வாக அனுபவங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் ஆழமாகப் படித்து, உணர்ந்து ஆட்சி நடத்துக என்று மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:–

இன்று தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்றால், அதன் பின்னால் பல தலைமுறைகளின் உழைப்பும், தொலைநோக்குப் பார்வையும், திராவிட இயக்க ஆட்சிகளின் விவசாயக் கொள்கைகளும் உள்ளன.

ஒரு காலத்தில் தமிழகம் கடுமையான உணவுப் பஞ்சத்தால் துடித்தது. அன்றைய காங்கிரஸ் முதலமைச்சர் கு.காமராஜரை தொடர்ந்து திரு.எம்.பக்தவத்சலம் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் அரிசி தட்டுப்பாடு கடுமையாக இருந்தது. வாரம் ஒரு முறை மட்டும் ரேஷன் கடைகளில்அரிசி வழங்கியதால் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். திருமண விழாக்களில் 25 பேருக்கு மேல் கலந்து கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடுகள், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆகியவை அந்தக் காலத்தின் நிதர்சனமாக இருந்தன. அந்தக் காலகட்டத்தில் மக்கள் கடும் பசியால் அவதிப்பட்டதாகவும், உயிர் வாழ்வதற்காக எலி போன்றவற்றையும் உணவாக பயன்படுத்தியதாகவும் பல அரசியல் உரைகளிலும் நினைவுக் குறிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு உணவுத் தட்டுப்பாடு தமிழகத்தை வாட்டியது. இதனால் பஞ்சம் பிழைக்க பல மாவட்டங்களில் இருந்து தஞ்சைக்கு குடிபெயர்ந்து வந்துள்ளனர்.

அந்த இருண்ட சூழ்நிலையில் தான் 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. ”ரூபாய்க்கு மூன்று படி அரிசி; குறைந்தபட்சம் ஒரு படி நிச்சயம் என்று அறிவித்த அண்ணா, மக்களின் பசியை அரசியலாக அல்ல, மனித உரிமையாகப் பார்த்தார்.

அண்ணா தலைமையிலான அரசு, உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கு தற்காலிகத் தீர்வுகளை மட்டுமல்ல, நிரந்தரமான விவசாய வளர்ச்சிக்கான அடித்தளத்தையும் அமைத்தது. பசுமைப் புரட்சிக்கு தமிழகத்தில் ஊக்கம் அளிக்கப்பட்டது. ஒரு போக நிலங்கள் இரு போகமாகவும், இருபோக நிலங்கள் முப்போகமாகவும் மாற்றப்பட்டன. கிணறுகள் அமைக்கப்பட்டன. பாசன வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன. நிலத்தடி நீர் பயன்பாடு அதிகரிக்கப் பட்டது. கலைஞர் ஆட்சி காலத்தில் தான் கூட்டுறவு துறை மூலம் நவீனஅரிசிஆலைகள் வந்தன. கிராமங்களில் கூட்டுறவு அங்காடிகள் துவங்கப்பட்டது. தனியார் நெல் கொள்முதல் மூலம் விவசாயிகளிடம் கொள்ளை லாபம் சம்பாதித்ததால் தமிழ்நாடுநுகர்பொருள் வாணிககழகம் தொடங்கப் பட்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.



விவசாயிகளுக்கு எளிதாக கடன் கிடைக்க நில வள வங்கிகள் மற்றும் கிராம கூட்டுறவு கடன் சங்கங்கள் போன்ற கூட்டுறவு நிதி அமைப்புகள் வலுப்படுத்தப்பட்டன. குறைந்த வட்டியில் கடன்கள் வழங்கப்பட்டன. விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், பாசன வசதிகளை மேம்படுத்தவும் ஊக்குவிக்கப்பட்டனர். உழைக்கும் விவசாயியின் கையைப் பிடித்து உயர்த்திய ஆட்சி திராவிட ஆட்சியாகும்.

இந்த நடவடிக்கைகளின் விளைவாக தமிழகத்தில் உணவு உற்பத்தி பல மடங்கு உயர்ந்தது. ஒருகாலத்தில் பிற மாநிலங்களை நம்பி உணவு பெற்ற தமிழ்நாடு, தனது தேவையை முழுமையாக பூர்த்தி செய்ததோடு, பிற மாநிலங்களுக்கும் தானியங்களை வழங்கும் அளவிற்கு வளர்ச்சி பெற்றது. விவசாய உற்பத்தி, கூட்டுறவு வளர்ச்சி, பாசன மேம்பாடு ஆகிய துறைகளில் தமிழ்நாடு இந்தியாவின் பல மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக விளங்கியது.

அந்த அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி. விவசாயம் வளர வேண்டும் என்றால் நீர் வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, வறட்சி காலங்களில் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் தூர்வாரப்பட்டன; ஆழப்படுத்தப்பட்டன; அகலப்படுத்தப்பட்டன.

விவசாய இயந்திரமயமாக்கலுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகளுக்குஆயில்இயந்திரம் , மின் மோட்டார்கள் வாங்க மாணியத்துடன் கடன் வழங்கப் பட்டது. பின்னர் அவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வகையில் முழுகடனும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல, விவசாயத்தின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டமாக விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. இன்று வரை தமிழ்நாட்டு விவசாயத்தின் முதுகெலும்பாக விளங்கும் இந்தத் திட்டம், இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் முன்னோடி திட்டமாக அமைந்தது.

அதே வளர்ச்சிப் பாதையில் திராவிட மாடல் ஆட்சின் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசும் பயணித்து வந்ததுடன். நீர்நிலைகளைப் புதுப்பித்தல், காவிரி டெல்டா பகுதிகளில் பாசன வசதிகளை மேம்படுத்துதல், விவசாயிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்களை விரிவு படுத்துதல், கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துதல், இயற்கை வளங்களை பாதுகாத்து எதிர்கால உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக் கப்பட்டு வந்தது

இந்த வரலாறு நமக்கு ஒரு மிகப்பெரிய பாடத்தை கற்றுத் தருகிறது. நல்ல ஆட்சி என்பது தேர்தல் வெற்றியால் மட்டும் உருவாகாது; தொலைநோக்குப் பார்வை, திட்டமிடல், விவசாயிக்கு துணை நிற்கும் மனப்பான்மை, நீர்வளத்தை பாதுகாக்கும் நிர்வாகத் திறன் ஆகியவற்றின் மூலம் உருவாகிறது.

எனவே, தற்போதைய அரசும், அரசின் அதிகாரிகளும் கடந்த கால ஆவணங்கள், சட்டமன்ற விவாதங்கள், நிர்வாக அனுபவங்கள் மற்றும் முன்னோடிகளின் மக்கள் நலத் திட்டங்களை ஆழமாகப் படித்து, அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு, காலத்திற்கேற்ப புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும். வரலாற்றில் வெற்றி பெற்ற திட்டங்களை மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.வெறும் சமூக வலைதளங்களில் அரசியல் செய்வதாலும், விளம்பரங்களில் சாதனைகளைச் சொல்வதாலும் மட்டும் ஒரு மாநிலமோ, ஒரு நாடோ முன்னேறாது. மக்களின் வாழ்க்கையை மாற்றும் திட்டங்கள், விவசாயத்தை காக்கும் கொள்கைகள், நீர்வளத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்கும் நிர்வாகம் ஆகியவையே உண்மையான வளர்ச்சியை உருவாக்கும். உணவுப் பஞ்சத்தில் தவித்த தமிழ்நாட்டை, உணவு வளம் மிக்க தமிழ்நாடாக மாற்றியது திராவிட ஆட்சிகள். பிறரை நம்பிய தமிழ்நாட்டை, பிற மாநிலங்களுக்கு தானியங்கள் வழங்கும் தமிழ்நாடாக உயர்த்தியது திராவிட ஆட்சிகள்.

அண்ணா அமைத்த அடித்தளத்தை கலைஞர் வலுப்படுத்தினார்; கலைஞர் உருவாக்கிய மக்கள் நலப் பாதையை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு தொடர்ந்து முன்னெடுத்து, விவசாயம், நீர்வளம், கூட்டுறவு மற்றும் மக்கள் நலத் திட்டங்களில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தி வந்தது தற்போதைய சோபா மாடல் அரசின் முதல்வர் அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் மக்களை காக்க திட்டங்களை தீட்ட வேண்டுமே ஒழிய தங்களை விமர்ச்சிப்பவர்களை கைது செய்ய துடிக்க கூடாது என்று மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.